10/=

பக்கங்கள் 08

எதிரொலி

Registered as a Newspaper in Srilanka

Ethiroli

குரல் 02 அதிர்வு 27 ஞாயிற்றுக்கிழமை 27 மே 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## பஸ்ஸுடன் மோதியவர் மயக்க நிலையில்!

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணம் கோண்டாவில் டிப்போவுக்கு முன்னால், பஸ் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10 . மணியளவில் இடம் பெற்றது. 3▶

# சுயாட்சி கிடைக்கும்

## முதலமைச்சர் நம்பிக்கை



யாழ்ப்பாணம், மே 27

"எமக்கு உரித்துக்களைத் தரமறுக்கும் சிங்கள அரசியல் தலைமைத்துவம் தற்போது வலுக்குறைந்து வருகின்றது.

அரசியல் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், கடன் சுமைகள், சர்வதேசத்தில் கடுமையான சாடல்களுக்கு உள்ளாகி, பல இடர்களைச் சந்தித்து வருகின்றது சிங்களத் தலைமைத்துவம். இத்தருணத்தில் தான் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு எமக்கு நேர்ந்த, நேர்ந்துகொண்டிருக்கும் இடர்களைப் பற்றி எல்லாம் உலகறியச் செய்ய வேண்டும். சுயாட்சியை வழங்க அவர்களே முன்வர வேண்டும். ஒரு கட்டத்தில் தமது தேவையின் நிமித்தம் எமக்குரிய சுயாட்சி உரிமையை அவர்கள் கையளிக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் என்பதில் நாங்கள் திடமான நம்பிக்கை வைக்க வேண்டும்"

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் நேற்றைய மாதாந்த கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும் 06▶

## 36 ஏக்கர் காணி நேற்று விடுவிப்பு

### காணிகளில் இப்பிலிப்பிலிக் காடு



யாழ்ப்பாணம், மே 27

வலிகாமம் வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து 36 ஏக்கர் காணி மக்களின் பாவனைக்காக நேற்று விடுவிக்கப் பட்டது. ஆயினும்விடுவிக்கப்பட்ட காணிகள் அடையாளம் தெரியாத வகையில், இப்பிலிப்பிலி மரங்களால் மூடப்பட்டிருந்த கோலத்தைப் பார்த்து மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

ஜே/233 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மாம்பிராய், மாங்கொல்லை பகுதிகளைச் சேர்ந்த 85 குடும்பங்களுக்குச் சொந்தமான 36 ஏக்கர்காணிகளே 06▶

## பஸ் பணிப்புறக்கணிப்பு: முடித்து வைத்த சிறீதரன்

கிளிநொச்சி, மே 27

கிளிநொச்சியில் தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். ஆயினும் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி .சிறீதரன் நடத்திய 3▶

## நஞ்சருந்திய இளைஞர் தூக்கிட்டு தற்கொலை

### சுன்னாகத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 27

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாட்டால் வீட்டில் ஆட்களற்ற சமயத்தில் இளைஞர் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்டார்.

சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு அருகில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் தங்கராசா புவனதீபன்(வயது-32) 3▶

## கொழும்பு போனவர் கொடிகாமம் வரவில்லை

### பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வதாக வீட்டில் கூறிச் சென்ற குடும்பத் தலைவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். 3▶



## அமைச்சர் சுவாமிநாதனை முற்றுகையிட்ட மக்கள்

முல்லைத்தீவு, மே 27

முல்லைத்தீவுக்குச் சென்ற மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனை மக்கள் முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியதால், அவர் தப்பினோம் பிழைத்தோம் என அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்.

போரால்பாதிக்கப்பட்ட முல்லைத் தீவு கடற்றொழிலாளர் 06▶

## தூத்துக்குடிப் படுகொலைகள்: யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே 27

தமிழகம் தூத்துக்குடியில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட மக்களுக்கு நீதிவேண்டி யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்.நகர பஸ் நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

தூத்துக்குடி மக்களின் போராட்டத்தை பொலிஸார் துப்பாக்கியைப் பயன்படுத்தி அடக்க முயற்சித்தமையை ஆர்ப்பாட்டத்தில் ஈடு 3▶

## தமிழ் இராணுவத்தை உருவாக்க வாருங்கள்

### யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி அழைப்பு



யாழ்ப்பாணம், மே 27

"இது சிங்கள இராணுவம் அல்ல. எல்லா இனத்தவர்களுக்குமான இராணுவம் ஆகும். யாழ்ப்பாணத்தில் தமிழ் இளையோர் கணிசமான அளவில் இராணுவத்தில் இணைவதன் மூலம் தமிழ் இராணுவத்தை இங்கு உருவாக்க முடியும். எனவே இராணுவத்தில் இணைய யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ் இளையோர்கள் 06▶

## 600 ஏக்கர் காணி விடுவிப்பு ரணில் நாளை அறிவிப்பு?



யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணத்துக்கு நாளை வரவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் மொத்தமாக 600 ஏக்கர் காணி விடுவிப்பு தொடர்பான அறிவித்தலை விடுப்பார் எனக் கூறப் படுகிறது.

வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிரதான மக்கள் குடியிருப்புக்களில் முகாம் அமைத்துள்ள படையினர் விலகி, அந்தக் காணிகளை மக்களிடம் வழங்க முஸ்தீபுகள் நடந்து வருகின்றன. 06▶

## மரபை மதிக்காவிட்டால் சொந்த நாட்டுக்கு போங்கள்!

யாழ்ப்பாணம், மே 27

"எங்கள் மரபை மதிக்கத் தெரியாதவர்கள் உங்கள் நாட்டுக்கே திரும்பிச் சென்று விடுங்கள்" இவ்வாறு ஆவேசமாகக் கூறியுள்ளார் இலங்கைச் சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன்.

பசு வதைக்கு எதிராகவும் கொல்களத்தை மூடுமாறு தெரிவித்தும் சாவகச்சேரி மத்திய பஸ் 3▶

# இறந்தோரை நினைவுகூர்தல் தேசத் துரோகக் குற்றமா?

யாழ்ப்பாணம், மே 27

மக்களுடைய மன நிலையை கிளிநொச்சியில் அமைந்துள்ள குறித்த தனியார் வங்கி புரிந்து கொள்ளத் தவறியுள்ளது.

இறந்தவர்களை நினைவுகூர்தல் தேசத் துரோகக் குற்றமா என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் அமைப்புச் செயலாளர் வி.ஜனகன் தெரிவித்துள்ளார்.

மே 18 ஆம் திகதி கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றில் நினைவேந்தல் நிகழ்வை மேற்கொண்டமை தொடர்பில், குறித்த வங்கியின் முகாமையாளர் ஒருவரும் சிற்றூழியர் ஒருவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"கிளிநொச்சியில் இயங்கும் இந்தக் கிளையில் இருந்த ஊழியர்கள் நினைவேந்தலை மேற்கொண்டமை, நிறுவனம் ஒன்றின் வரையறைகளுக்குள் வரவில்லை என்றாலும், அதனைக் கையாளும் போது, அங்கு உள்ள மக்களின் மனநிலையையும் கருத்தில் எடுத்திருக்க வேண்டும். அந்த ஊழியர்களும் வாடிக்கையாளர்களும் அந்தக் கொடிய போரில் தங்கள் உறவுகளை இழந்தவர்களாக இருக்கலாம் அவர்களுக்கும் மற்றவர்கள் போல் துக்கம் அனுஷ்டிக்கத் தேவை ஏற்பட்டிருக்கலாம். ஒரு வேளை இதனை அந்த வங்கியின் தலைமை விரும்பாமல் இருந்தால் கூட, அப்பிரதேச மக்களின் உணர்வுளுக்கு மதிப்பளித்து, அந்த ஊழியர்களை இடைநிறுத்தாமல், இந்த நிகழ்வு இனிவரும் காலங்களில் தங்கள் கிளைகளில் இடம் பெறாமல் தடுப்பதற்கான அலுவலக ரீதியானகட்டளைகளைப் பிறப்பித்திருக்கலாம்.

" வங்கியின் தலைமையே, நீங்கள் கூறிய அறிக்கையில் இன, மத ரீதியான செயற்பாடுகளுக்கு எமது வங்கி ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படியாயின், கிறிஸ்மஸ் பண்டிக்கைக்கு ஏன் உங்கள் கிளைகளை அலங்கரிக்கிறீர்கள்? வெசாக், பொசன் வரும்போது அலங்கரிப்பது மட்டும் அல்லாமல் உங்கள் ஊழியர்கள் தன்சல் (அன்னதானம்) வழங்குகிறார்களே? தைப்பொங்கலுக்கு பொங்குகிறீர்கள். சிங்கள, தமிழ் புது வருடத்துக்குஅந்தக் கொண்டாடங்களையும் செய்கின்றீர்கள். அந்த இடத்தில் மாபெரும் துயரச் சம்பவம் இடம் பெற்றதை நினைவுகூர்கிறார்கள். இதேபோல் தானே சுனாமியால் மக்கள் இறந்ததும் நினைவுகூரப்பட்டது. அப்போதும் உங்கள் பல கிளைகள் இந்த அனுதாப நினைவு கூரலைச் செய்தார்கள். அது தவறாக வில்லையா?" என்றும் அந்த அறிக்கையில் கேள்வி எழுப்பப் பட்டுள்ளது. (ஆ)

## அமெ. கடற்படை பயிற்சிக்கு இலங்கைக்கு அழைப்பு!

கொழும்பு, மே 27

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அமெரிக்கா நடத்தி வரும் பாரிய கடற்படைக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க முதல்முறையாக இலங்கைக் கடற்படைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஹவாயில் பசுபிக் விளிம்பு ஒத்திகை என்ற பெயரில், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கடற்படைக் கூட்டுப் பயிற்சியை அமெரிக்கா நடத்தி வருகிறது.

1971ஆம் ஆண்டு அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கூட்டுப் பயிற்சி, இந்த ஆண்டு அடுத்த மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகி, 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த முறை கூட்டுப் பயிற்சியில் இந்தியா, அவுஸ்ரேலியா, ஜப்பான், கனடா உள்ளிட்ட 2 0இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

இதில் பங்கேற்க இந்த முறை இலங்கைக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அடுத்த மாதம் ஆரம்பமாகும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க இலங்கைக் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று ஹவாய்க்குச் செல்லவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளால் இலங்கையுடன் இராணுவ உறவுகளை குறைத்திருந்த அமெரிக்கா அண்மையில், இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்தி வருகிறது.

இதன் அடுத்தகட்டமாகவே, இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா முதல்முறையாக கூட்டுப் பயிற்சிக்கான அழைப்பை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## நுரைச்சோலை மின் உற்பத்திக்கு தற்காலிக தடை

நுரைச்சோலை, மே 27

அத்தியாவசிய திருத்தப் பணிகள் காரணமாக நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டு மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் செயற்பாடு நேற்றுக் காலை முதல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

ஒரு மின்பிறப்பாக்கி மட்டுமே தற்பொழுது செயற்பாட்டில் உள்ளதாகவும் தேசிய மின் கட்டமைப்புக்கு 200 மெகாவோட் மின்சாரம் இதனால் இணைத்துக்கொள்ளப்படுவதாகவும் சபை தெரிவித்துள்ளது.

இவற்றின் திருத்தப் பணிகள் ஐந்து நாட்களுக்கு இடம்பெறும் எனவும் சபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஆ)

# ரணிலுக்காகவே 20 கொண்டுவரப்பட்டது!

## வாசுதேவ குற்றச்சாட்டு



கொழும்பு, மே 27

பிரதமர் ரணில் விக்ரமசிங்க முழுமையான அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான சூழலை உருவாக்கும் நோக்கத்திலேயே,

20ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியால் 20 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் நேற்றுமுன் தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விடயத்தில் கூட்டு எதிர்கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"20 ஆம் சீர்திருத்தத்துக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் கூட்டு எதிர்கட்சியால் தீர்மானம் ஒன்று இன்னும் எடுக்கப்படவில்லை. அதற்கான கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. எனினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதற்கு கூட்டு எதிரணி ஆதரவளிக்காது என்பதே எமது நிலைப்பாடாகும்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதிகாரங்கள் அனைத்தும் நாடாளுமன்றத்தைச் சேரும்.

நாட்டில் ஜனாதிபதிக்கு அடுத்து அதிகாரங்கள் பெற்றவர் பிரதமராவார். எனவே நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டால் அடுத்து அதிகாரங்கள் யார் வசம் என்ற சிந்திக்கும்போது, அவற்றைக் கைப்பற்றக் கூடியவராக பிரதமர் காணப்படுவார். எனவே ஜே.வி.பியின் 20 ஆம் சீர்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அதிகாரங்கள் அனைத்தும் ரணில் வசம் செல்வதற்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன.

ஐ.தே.க.வினுடைய அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துக் கொள்கைகளுமே நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும்

பொருத்தமற்றதாகவே காணப்படுகின்றன. எனவே, அதிகாரங்களை கைப்பற்றுவதற்கு கூட்டு எதிர்கட்சி ஒரு போதும் ஒத்துழைப்பு வழங்காது. அதே வேளை மீண்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சி பீடமேறுவதையும் அங்கீகரிக்காது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## அமைச்சர் மங்கள பொய்யின் பிறப்பிடம்!

### மகிந்த சாடல்

கொழும்பு, மே 27

அமைச்சர் மங்கள் சமரவீர சொல்வதையெல்லாம் கருத்தில் கொண்டு கேள்வி கேட்க வேண்டாம். அவர் பொய்யின் பிறப்பிடம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

"கண்டியில் நேற்றுமுன்தினம் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

"இப்போது மக்கள் வாழ்வதற்கு கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் தொடர்ந்து நீடித்தால் மக்கள் தற்கொலை செய்துகொள்ள நேரிடும். கோத்தாபய ராஜபக்ச முன்வைத்த புதிய பொருளாதாரத் திட்டத்தினூடாக இலவசக் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட சேவைகள் இருந்தது போன்றே வழங்கப்படும்" எனவும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார். (ஆ)

## வெளிநாட்டு தூதுவர்கள் ஐவர் நியமனம்!

கொழும்பு, மே 27

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஐந்து வெளிநாட்டு தூதுவர்கள் தமது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதன்படி, சவூதி அரேபியா, மொசாம்பிக், சுவீடன், பின்லாந்து, மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளின் தூதுவர்களே ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து இவ்வாறு தமது நியமனக் கடிதங்களை ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஆ)

# தூத்துக்குடி படுகொலைக்கு கொந்தளித்த மட்டு மக்கள்

தமிழகம் - தூத்துக்குடியில் படுகொலை செய்யப்பட்ட தமிழக உறவுகளுக்கு நீதி வேண்டி மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

காந்தி பூங்காவின் முன் காலை 10 மணிக்கு ஒன்று திரண்ட நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் தூத்துக்குடியில் படுகொலை செய்யப்பட்டு உயிர் நீத்தவர்களுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து "கொல்லாதே கொல்லாதே ஜனநாயத்தைக் கொல்லாதே", "கொலைகாரர்களை நீதியின் முன்நிறுத்து", " இலங்கைத் தமிழர்களுக்கும் இந்திய தமிழர்களுக் கம் தொப்புள் கொடி உறவு", " சீண்டாதே சீண்டாதே தெர்ப்புள் கொடி உறவுகளை" போன்ற சுலோகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு, ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர். (ஆ)








எதிரொலி Ethiroli
ஞாயிறு. 27 மே 2018 ethirolimedia@gmail.com

# ஏன் இந்த திடீர் அக்கறை?

நாட்டில் எத்தனையோ எரியும் பிரச்சினைகள் இருக்க, அவை பற்றி மூச்சுக் கூட விடாத, மதவாத அமைப்பொன்று திடீரென மாட்டிறைச்சிக்கு எதிராகக் கம்பு சுற்றத் தொடங்கியிருக்கிறது. காணாமல் போனோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு என்று தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து, 'சிவசேனா' என்ற – அண்மையில் உருவான இந்திய வாலாட்டு அமைப்பு – எந்தவிதப் போராட்டங்களோ, அறிக்கைகளோ விடுவதில்லை. திருவாதிரைத் திருவிழாவுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பலில் சிதம்பரத்துக்கு அழைத்துப் போவதாக இரண்டு வருடங்களாக தடல்புடல் அறிவிப்புகளை விட்டு, எல்லோர் தலையிலும் மிளகாய் அரைத்ததைத் தவிர வேறெதனையும் இலங்கைச் சிவசேனா வெட்டிப் பிடுங்கவில்லை. இந்தச் சீத்துவத்தில் 'பப்ளிசிட்டிக்காக' இந்தியாவின் பாரதிய ஜனதாவின் பாணியில் 'மாட்டிறைச்சிக்கு' எதிராகக் களமாட முனைந்துள்ளது. சாவகச்சேரியில் ஆர்ப்பாட்டம், நேற்று உண்ணாவிரதம் என்று ஒவ்வொரு கட்டமாக மாட்டிறைச்சி தான் தமிழர்களின் தலையாய பிரச்சினை போல பூதாகரமாக்கி வருகிறார்கள்.

சைவசமயத்தில் பலருக்கு பிடித்ததே அடிப்படை வாதம், இறுக்கமான கட்டுப்பாடுகள் என்று எதுவும் இல்லாமல் எப்படியும் வாழலாம் இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஏனைய சில மதங்களைப் போல அடித்துச் சொல்லாமலிருப்பதே. எனக்கெல்லாம் ஏதாவது விண்ணப்படிவங்களில் என்ன மதம் என்று கேட்கும் போதுதான் அட நான் இந்து மதம் என்ற நினைப்பே வருகின்றது. அவ்வளவுக்கு என்னை எந்த விதத்திலும் மதம் கட்டுப்படுத்தவில்லை.

இந்தியாவில் பி.ஜே.பி ஆட்சிக்கு வந்தபின் இந்து மதம் எப்படி அடிப்படைவாத மதமாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறதோ அதேபோல, 'இந்துக் கல்லூரி இந்துக்களுக்கே, சைவர்களும்' பௌத்தர்களும் வாழும் நாட்டில் மாட்டு இறைச்சிக் கடை ஏன்?' போன்ற முட்டாள் தனமான வாதங்களுடன் இலங்கையில் சைவமும் அடிப்படைவாத மதமாக்கப்படுகிறது.

இந்த மாட்டு இறைச்சி விவகாரம் கடந்த ஒருவருட காலமாகவே பூதாகரமாகிக்கொண்டிருக்கிறது. அதற்கு முன்னர் இந்துக்கள் மாட்டு இறைச்சி உண்ணவில்லையா? ஆரம்பத்தில் இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்கக்கூடாது என்று உள்ளூராட்சி சபைகளை ஊடகங்கள் மூலம் வெருட்டினார்கள். அப்புறம் துண்டுப் பிரசுரம் மூலம் இறைச்சிக் கடைகளை ஆதரிக்கும் உறுப்பினர்களை தெரிவு செய்ய வேண்டாம் என்று ஒட்டினார்கள். இப்போது வீதிக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள்.

இந்தியாவில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தபின் எப்படி ஆர்.எஸ்.எஸ், இந்துத்துவா சக்திகளின் மூலம் மாட்டு இறைச்சிக் கெதிராக வன்முறைகள், கொலைகளை செய்தார்களோ அதேபோல் இங்கேயும் ஏதோ ஒரு நிகழ்ச்சி நிரலால் இயக்கப்பட்டு இனமதவாத சம்பவங்களை நிறைவேற்ற முயல்கின்றார்கள் என்பதே வெளிப்படையாகும். இவ்வளவு காலமும் இல்லாத மாட்டின் மீதான அக்கறை திடீரென ஏன்?

மத இன அடிப்படைவாதங்கள் எந்த இன மதமாக இருந்தாலும் அகற்றப்படவேண்டியதே. அதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்ககூடாது. மத இனங்களை விட மனிதம் வாழவேண்டும். எதை உண்ண வேண்டும், எதை உண்ணக்கூடாது என்பது ஒவ்வொரு மனிதனதும் தனிப்பட்ட உரிமை. அதில் கூட மண்ணள்ளிப் போடுபவர்களை என்னவென்பது?

உங்களுக்குப் பேர் கிடைக்க வேண்டும், நான்கு பேர் பார்க்க வேண்டும் என்பதற்காக போராட ஏதும் விடயம் தேவை என்றால், மக்களுக்குள்ள உண்மையான பிரச்சினைக்குப் போராடுங்கள். அதைவிடுத்து இல்லாத ஒன்றைப் பிரச்சினையாக்கி, அந்தத் தீயில் குளிர்காய நினைக்கிறார்கள். ஏனெனில் இதுவொன்றும் பாரதமல்ல.பாடுகள் சுமந்த மண். நினைவிருக்கட்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## கலைநிலா அரங்கு இன்று யாழில்

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நுண்கலைப் பாடங்களைப் பயிலும் மாணவர்களின் கலை ஆற்றலை வெளிக்கொணரும் முகமாக மாதந்தோறும் நடத்தப்பட்டு வரும், கலைநிலா அரங்கு பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இன்று ஞாயிறு மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி திருமதி சுகந்தி முரளிதரன் கலந்துசிறப்பிக்கவுள்ளார். நிகழ்வில் கிராமிய சங்கமம், வாய்ப்பாட்டு, விரலிசை நாதம், பல்லியம், நிருத்தாஞ்சலி உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கலைத்தூது அழகியல் கல்லூரி அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# வவுனியா வர்த்த சங்கதினரை சந்தித்தார் அமைச்சர் அனந்தி

வவுனியா, மே 27

வடமாகாண சபை மகளிர் மற்றும் சிறுவர் விவகார வர்த்தக கைத்தொழில் அமைச்சர் அனந்தி சசிதரனுக்கும், வவுனியா வர்த்தக சங்கத்தினருக்கு மிடையே நேற்று சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

வவுனியா வர்த்தக சங்கத்தலைவர் தி.க.இராஜலிங்கம் தலைமையில் வவுனியா முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள வர்த்தக சங்க கட்டடத்தில் இந்தக்கலந்துரையாடல்இடம்பெற்றது.

இதன் போது வர்த்தக சங்கத்தினால் வவுனியா பழைய பேருந்து நிலையத்தினை மூடியதன் காரணமாக வவுனியா வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டதோடு, வவுனியா வர்த்தக சங்கம் மற்றும் பொது அமைப்புக்கள், அரச தனியார் பஸ் சங்கங்கள் இணைந்து முதலமைச்சருடன் கலந்துரையாடி தீர்வினை பெறுவதற்கான ஓர் ஒழுங்கினைச் செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன் வவுனியாவில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் வவுனியா நகரில் உள்ளூர் விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்துக்கு பொருளாதார மத்திய நிலையத்தில் கடைகள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் ஏனைய கடைகளை வவுனியாவில் வாழ்கின்ற மூவின மக்களின் சனத்தொகையின் படி விகிதாசார அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தனர்.

வர்த்தக சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க முதலமைச்சருடன் கலந்துரையாடி தீர்வினை பெற்றுத்தருவதாக வடமாகாண சபை மகளிர் மற்றும் சிறுவர் விவகார வர்த்தக கைத்தொழில் அமைச்சர் அனந்தி சசிதரன் உறுதியளித்தார். இதன் போது வர்த்தக சங்கத்தினால் அமைச்சருக்கு நினைவுச் சின்னமும் மகஜரும் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா வர்த்தக சங்க தலைவர் தி.க.இராஜலிங்கம், செயலாளர் கோ.ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் வர்த்தக சங்க நிர்வாக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(அ)

# தொடர்ச்சிகள்

**மரபை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் நேற்று அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பல்லாயிரக்கணக்கான வருடங்களாக இல்லாத மாட்டிறைச்சிக் கடையும், கொல்களமும் இப்போது எப்படி வந்தன?

2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் இவை சாவகச்சேரிப் பிரதேச சபையின் அனுமதியுடன் கொடிகாமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை யார் அமைத்திருக்கிறார்கள்? இந்த மண்ணிலே பிறந்தவர்களோ, இங்கு பூர்வீகமாக இருந்தவர்களோ அல்ல. சில காலங்களுக்கு முன்னர் இங்கு வந்தவர்கள் தான் இப்படியான மாட்டிறைச்சி விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் தங்கள் ஊரில், தங்களின் பூர்வீக நாடுகளில் என்ன செய்கிறார்கள்? சவூதி அரேபியாபிலே யாரும் பன்றி இறைச்சி சாப்பிட முடியுமா? அப்படி முடியாத போது எங்கள் நாட்டில் எப்படி மாட்டிறைச்சி சாப்பிடமுடியும்?

வெள்ளையர்களுக்கே மாட்டிறைச்சி கொடுக்க மாட்டேன் என்று போராடியவர் சுவாமி ஞானப்பிரகாசர்.

ஆறுமுகநாவலரும் மாட்டிறைச்சி உண்பதற்கு எதிராகப் போராடினார்.

இந்த மண்ணுக்குப் பிழைக்க வந்தால் இந்த மண்ணின் மரபை மதித்து வாழுங்கள். இல்லாவிட்டால் உங்கள் நாட்டுக்கே திரும்பச் சென்றுவிடுங்கள். இதை நான் மட்டும் சொல்லவில்லை. அவுஸ்ரேலியா, ரஷ்யா உள்ளிட்ட 13 நாடுகள் இதைத்தான் சொல்கின்றன. அந்த நாடுகளின் மரபை மதிக்காதவர்களுக்கு அங்கு இடமில்லை. அதேபோல் இங்கும் இடமில்லை" என்று அவர் மேலும் கூறினார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில், யாழ்ப்பாண நாகவிகாரையின் விகாராதிபதி விமலதேரர், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரியர், ஜாக்கிரத சைதன்ய சின்மிய மிஷன் சுவாமிகள் மற்றும் இந்து அமைப்புகளைச் சேர்ந்தோர் கலந்துகொண்டனர். (அ)

**பஸ்ஸூடன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் சென்றவர், வீதியில் பயணிகளை ஏற்றிக்கொண்டிருந்த தனியார் பஸ்ஸூடன், பின்னால் சென்று மோதுண்டதாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் சுயநினைவற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

**நஞ்சருந்திய...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரே இவ்வாறு தற்கொலை செய்தவராவார்.

குறித்த இளைஞருக்கு அண்மையில் பதிவுத் திருமணம் இடம்பெற்றிருந்தது. இந்த நிலையில் வீட்டில் உள்ளவர்கள் திருமண வைபவம் ஒன்றுக்காக வெளியூர் சென்றுவிட்டு, நேற்றுக்காலை வீட்டுக்கு வந்தபோது கதவு பூட்டப்பட்டிருந்தது. ஆனால் உள்ளே இருந்து இளைஞர் வரவில்லை. இதனால் கதவை உடைத்துச் சென்று பார்த்தபோது, தூக்கில் தொங்கி அறுந்து விழுந்த நிலையில் இளைஞரின் சடலத்தையே அவர்கள் காண முடிந்தது. பின்னர் சுன்னாகம் பொலிஸார் வந்து மேலதிக விசாரணைகளின் பின்னர் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மரண விசாரணைக்காக அனுப்பி வைத்தனர். மரண விசாரணையின் போது, குறித்த இளைஞர் நஞ்சருந்திய பின்னரே தூக்கில் தொங்கி உயிரை மாய்த்த விடயம் தெரிய வந்துள்ளது. நேற்று மாலை அவரின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

பதிவுத்திருமணம் செய்த பெண்ணுக்கும் , இளைஞருக்கும் இடையே ஏற்பட்ட மனஸ்தாபத்தாலேயே அவர் இவ்வாறு தவறான முடிவை எடுத்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (அ)

**பஸ்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களின் அடிப்படையில், இந்தப் பணிப்புறக் கணிப்பு முடிவுக்கு வந்தது.

உள்ளூர் கிராமங்களுக்கான போக்குவரத்து வழி அனுமதி வெளிமாவட்டக்காரர்களுக்கு வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபையினால் தன்னிச்சையாக வழங்கப்பட்டதாகக் கூறியே, அதைத் தடுத்து நிறுத்தக்கோரி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டம் நடந்த இடத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வழி அனுமதியினை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதிமொழியை அடுத்து, போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (அ)

**கொழும்பு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் உறவினர்கள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். கச்சாய் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த சிவராசா உதயகுமார் (வயது-48) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். கடந்த 21 ஆம் திகதி கொழும்புக்குச் செல்வதாகச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

**தூத்துக்குடிப்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டோர் மிக வன்மையாகக் கண்டித்தனர்.

தமிழகம் தூத்துக்குடியில் ஸ்ரெலைட் ஆலையை மூட வலியுறுத்தி மக்களால் நடத்தப்படும் மாபெரும் போராட்டத்தின நூறாவது நாளான கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை

முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்பட்டது. இதன் போது தமிழகப் பொலிஸார் மேற்கொண்டதுப்பாக்கிச் சூட்டில் மாணவி உட்பட 12 பேர் உயிரிழந்ததுடன், மேலும் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு உயிரிழந்ததுடன், பலர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## இன்று நாளும் கோளும்

27.05.2018 ஞாயிற்றுக்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 13 ஆம் நாள்
திரயோதசி பி.ப. 07.10 வரை | சுவாதி மு.ப. 10.43 வரை | குளிகை மு.ப. 03.00-04.30
இராகுகாலம் 04.30- 06.00 | சுபநேரம் காலை 06.30 - 07.30 | எமகண்டம் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முயற்சி | சாந்தம் | பெருமை | மேன்மை | நிறைவு | யோகம் | உதவி | உழைப்பு | இரக்கம் | நட்பு | சினம் | தோல்வி |

மருத்துவ பீட அபிவிருத்தி

## நிதி ஒதுக்கீடு

பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களின் அபிவிருத்திக்கு அரசாங்கம் தொள்ளாயிரம் மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

கிழக்கு ரஜரட்ட, பேராதனைப் பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களுக்குத் தேவையான வசதிகள் இதன் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதேவேளை, இலங்கையின் வைத்தியசாலைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்தவென ஒஸ்திரியா ஆயிரத்து 810 மில்லியன் ரூபா பெறுமதியான வட்டியில்லாக் கடனை வழங்கி உள்ளது. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நிதியமைச்சில் கடந்த புதன்கிழமை கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## தரம் ஒன்றுக்கு விண்ணப்பம் !

2019 ஆம் ஆண்டில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் ஏற்றுக்கொள்ளப்பட உள்ளன.

தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான சுற்று நிருபம் தயாரிக்கப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரன தெரிவித்துள்ளார்.





# மட்டு. சுகாதாரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்!

மட்டக்களப்பு, மே 27

மட்டக்களப்பு -ஏறாவூர் நகர சபையின் செயற்பாடுகளைக் கண்டித்து, சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் மற்றும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் ஆகியவற்றில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் நகர சபை முன்றலில் நேற்று நடத்தப்பட்டது.

இதனால், திண்மக்கழிவகற்றும் நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன.

இந்தப் போராட்டம் பணியாற்றும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் உரிய காலப் பகுதியில் வழங்கப்படாமை, சீருடைகள் விநியோகிக்கப்படாமை, பத்து மாத காலங்களாக இடர் கடன் வழங்கப்படாமை மற்றும் செயலாளரும் நிதியுதவியாளரும் ஊழியர்களுடன் கடுமையாக நடந்துகொள்ளல், தகாத வார்த்தைப் பிரயோகம் செய்தல் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்தே இது நடைபெற்றது.

இதன்போது நகர சபையின் முதல்வர் ஐ. அப்துல் வாசித் மற்றும் உப தவிசாளர் எம். எல். றெபுபாசம் ஆகியோர் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வருகைதந்து, ஊழியர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர். அத்துடன், மகஜர் ஒன்றையும் கையேற்றனர்.

செயலாளருடைய நடவடிக்கை தொடர்பாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உத்தரவாதமளித்ததுடன், பிரதேசத்தின் சுகாதார நலனைக் கருத்தில்கொண்டு, உடனடியாக வேலைக்குத் திரும்புமாறும் வேண்டுகோள் விடுத்தனர். எனினும், ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிடவில்லை.

இந்த விடயம் குறித்து, ஏறாவூர் நகர சபையின் செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயிலுடன் ஊடகங்கள் தொடர்புகொண்டு கேட்டபோது, இந்தக் குற்றச்சாட்டுகள் சோடிக்கப்பட்டவை எனத் தெரிவித்தார். அத்துடன், 10 மாத இடர்கடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள விண்ணப்பங்களின் தொடர் அடிப்படையிலேயே வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். (ஆ)

# வாக்குறுதிகளை நிறைவேற்றுக!

அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து



கொழும்பு, மே 27

இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கின்றது. அதேவேளை, வழங்கிய வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"பிரகாசமான எதிர்காலம் என்ற இலங்கையின் கனவை நனவாக்குவதற்காக இலங்கையுடன் கைகோத்துப் பயணிப்பதற்கு அமெரிக்கா விரும்புகின்றது. நல்லிணக்க முயற்சிக்கு இலங்கையே தலைமை தாங்க வேண்டும். காயங்களை ஆற்றக்கூடிய பிரகாசமான எதிர்காலத்துக்கு வழிவகுக்ககூடிய நல்லிணக்க முயற்சியை முன்னெடுக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது என அமெரிக்கா மாத்திரமல்ல, இலங்கையும் ஐ.நா. செயற்பாடுகள் மூலம் உறுதி வழங்கியுள்ளது.

இலங்கை வெற்றியடையவேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம். இலங்கையுடனான எங்கள் உறவுகள் விஸ்தரிக்கப்படுவதற்காக பெருமளவு முதலிட்டுள்ளோம். இலங்கை யுத்தத்துக்குப் பிந்திய காலத்துக்குள் இருக்கும் இந்தத் தருணத்தில் ஜனநாயகத்தை பலப்படுத்தும் அதே வேளை அளிக்கப்பட்ட வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டும்.

2016 ஆம் ஆண்டு சுதந்திரக்கொண்டாட்டங்களை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்த சிலரில் நானும் ஒருவன்.

தேசிய கீதம் சிங்களத்தில் இசைக்கப்பட்டவேளை வளர்ந்தவர்கள் கூட கண்ணீர் விடுவதை மாத்திரம் நான் பார்க்கவில்லை.

ஐம்பது வருடத்துக்குப் பின்னர் அரச நிகழ்வில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவதைப் பார்த்துக் கண்ணீர் சிந்தப்படுவதையும் நான் பார்த்திருக்கின்றேன். இதுவே நல்லிணக்கத்தின் பலம். மிக மோசமான துயரம் மற்றும் மனவேதனைகளுக்குப் பின்னர் காயங்கள் ஆற்றப்படுவதன் பலம் இது. நாங்கள் சமமான வாய்ப்புகளையே கோருகின்றோம். மிக நீண்ட காலமாக இந்தோ. பசிப்பிக்கில் நிலைகொண்டுள்ளோம்.

நாங்கள் வெளிப்படையான சுதந்திரமான இந்தோ. பசிபிக்கையும், அனைவருக்கும் பலனளிக்க கூடிய சர்வதேச முறையையுமே நாங்கள் விரும்புகின்றோம்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



## மலிக் சமரவிக்ரமவுடன் சீனத் தூதுவர் பேச்சு!

கொழும்பு, மே 27

முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பது தொடர்பாக, இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஷியுவான், அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வணிக அமைச்சர் மலிக் சமரவிக்ரமவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பு, அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வணிக அமைச்சின் செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிப்பது குறித்துக் கலந்துரையாடப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டையில் சீனா இராணுவத்தளம் அமைக்கவுள்ளதாக வெளியாகும் தகவல்களால் சீனா எரிச்சலடைந்துள்ளது.

அத்தகைய பரப்புரைகளை முறியடிக்க சீனத் தூதுவர், அரச மற்றும் எதிர்க்கட்சி வரிசையில் உள்ள முக்கிய அரசியல் பிரமுகர்களை அண்மைய நாட்களாக சந்தித்துப் பேச்சு நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு வளங்களை பயன்படுத்த வேண்டும்!

புலம்பெயர்ந்தோரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 27

வட மாகாணத்துக்குள் வருகை தருகின்ற புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் வட மாகாணத்தின் வளங்களைப் பயன்படுத்த வேண்டும் என யாழ். வணிகர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான இ.ஜெயசேகரன் தெரிவித்தார்."

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. யுத்தம் முடிவடைந்து 9 வருடங்கள் முடிவடைந்துள்ள நிலையிலும் முழுமையான அபிவிருத்தி அடையவில்லை. மீள்குடியேற்றம், அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் தீர்வு விடயம் முழுமையான முயற்சிகள் எவையும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. இது ஒருபுறமிருக்க அபிவிருத்திப் பணிகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்று வருகிறன. இவ்வறான சூழலில் எமது வடக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளின் வரவு சுமாராகவே உள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாணங்களுக்கு வருகை தருகின்ற நம்மவர்கள் சரி, வெளிநாட்டவர்கள் சரி வடக்கு மாகாணத்தின் வளங்களைக் குறிப்பாக ஹோட்டல்கள், போக்குவரத்து வாகனங்கள் மற்றும் உணவுகள் விசேடமாக உள்ளூர் உற்பத்திகளைப் பயன்படுத்துவதற்கு ஆர்வம் காட்ட வேண்டும். இவ்வாறான வளங்களைப் பயன்படுத்துகின்றபோது வடமாகாணத்தில் உள்ளவர்கள் தமது பொருளாதார

வளங்களை அதிகரித்துக்கொள்வதுடன், பொருளாதார ரீதியில் முன்னேறக் கூடிய நிலை ஏற்படும். மேலும் இவ்வாறு வெளிநாட்டவர்கள் புலம் பெயர்ந்தவர்கள் செய்கின்றபோது உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதுடன் இதற்கான சந்தை வாய்ப்புக்களும் அதிகரிக்கும். வடக்கின் தற்போதைய சூழலில் உள்ளூர் உற்பத்திகளைச் செய்வதற்கு நம்மவர்கள் ஆர்வம் காட்டிவருகின்றார்கள். இதனை இன்னும் ஊக்கப்படுத்துவதற்காக இவ்வாறான திட்டங்களை ஊக்குவிப்பது அனைவருக்கும் நன்மை அளிப்பதாகவே இருக்கும். " என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)



# மட்டு. மாணவர்களுக்காக விழிப்புணர்வு நடவடிக்கை!

மட்டக்களப்பு, மே 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப்பொருள் பாவனை என்பனவற்றைத் தடுப்பது தொடர்பான விசேட விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த நடவடிக்கைகள் நேற்றுக் காலை மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் உயர் தேசிய பாடசாலையில், மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் கே.நாராயணம்பிள்ளை தலைமையில் நடைபெற்றுள்ளது.

மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் ஆதரவுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு என்பன இணைந்து இந்த நிகழ்வை நடத்தி உள்ளன.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில், மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து சுமார் 400 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது, பாடசாலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் போதைப்பொருள் பாவனையை தடுப்பது மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை அதில் இருந்து மீட்பது, போதைப்பொருள் பாவனைக்கு விதிக்கப்படும் தண்டனைகள், அதனால் மாணவர்களின் எதிர்காலத்தில் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் சமூகத்தில் போதைப்பொருளால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

அத்துடன், சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதனைத் தடுப்பதற்கான வழிவகைகள், அதனால் ஏற்படும் பாதிப்புகள் என்பன தொடர்பில் சட்டத்தரணிகளால் விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், மாணவர்கள் மத்தியில் நிலவும் சட்டம் தொடர்பான சந்தேகங்களுக்கும் சிரேஸ்ட சட்டத்தரணிகள் பதில் வழங்கினர்.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ஏ.உவைஸ், சிரேஸ்ட

சட்டத்தரணிகளான பே.பிரேம்நாத், பி.சின்னையா, வி.வினோபா இந்திரன், ரி.தியாகேஸ்வரன் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஆ)

# அனர்த்தப் பணியில் முப்படை வீரர்கள்

காலி, மே 27

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தொடர்ந்தும் நிலவும் அதிக மழைவீழ்ச்சி காரணமாக சுமார் மூன்றில் இரண்டு பங்கு மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மக்களுக்கான அனர்த்தப்பணிகள் மற்றும் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளில் 820 இற்கு மேற்பட்ட முப்படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி மழை தொடங்கியுள்ள அதேவேளை, நாட்டில் முன்னொருபோதும் இல்லாத வகையில் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்று வருகின்றது. இதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கம் ஆகிய அனர்த்தங்களால் இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக முப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் கம்பஹா, கொழும்பு, மாத்தறை, களுத்துறை, கேகாலை, புத்தளம், இரத்தினபுரி, காலி மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக இராணுவ மற்றும் கடற்படையினருக்குச் சொந்தமான 63 படகுகள், கவச வாகனங்கள், பஸ்கள் என்பன மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் அவசரகால சூழ்நிலைகளை எதிர்கொள்ள நேரிடும் பிராந்தியங்கள் பலவற்றில், இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைகளைச் சேர்ந்த சுமார் 7300 மேற்பட்ட படை வீரர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடுமையான காற்றில் பாதிக்கப்பட்ட குருநாகல், நிக்கவரெட்டிய, ரஸ்னாயகபுர மற்றும் பொல்கஹவெல ஆகிய பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் படையினர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் பாதிக்கபட்ட பலர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு அவர்களுக்கான உலர் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# தூத்துக்குடி வன்முறைக்கு திருமலையிலும் கண்டனம்

திருகோணமலை, மே 27

தமிழகத்தின் தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலை நிறுவனத்துக்கு எதிராக போராட்டம் மேற்கொண்ட மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு, 13 பேரைப் படுகொலை செய்த சம்பவத்தைக் கண்டித்து , திருகோணமலையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் மேற்கொள்ளப்பட்டது.

"போராட்டங்களை நடத்துவது மக்களின் உரிமை. அதன்போது தாக்குதல் நடத்தி மக்களைக் கொலை செய்கின்றமை கண்டனத்துக்குரியது" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ஆ)



# அடிப்படை வசதியின்றி அமைதிபுரத்தில் அவலம்!

முல்லைத்தீவு, மே 27

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள அமைதிபுரம் கிராமத்தில் வாழும் மக்கள் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும், தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள எல்லையோரக் கிராமங்களில் ஒன்றான அமைதிபுரம் கிராமத்தில் வாழ்ந்து வரும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கான அடிப்படை வசதிகள் இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

குடிதண்ணீர் நெருக்கடிக்கு முகங்கொடுப்பதுடன் இந்தப்பிரதேசத்தில் காணப்படுகின்ற 13 கிலோமீற்றர் வரையான உள்ளக வீதிகள் புனரமைக்கப்படாமையால் போக்குவரத்திலும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஆ)

# உலகில் அனர்த்தங்களில் இலங்கை முன்னிலை!

கொழும்பு, மே 27


உலகில் அனர்த்தங்கள் அதிகமாக இடம்பெறும் நாடுகள் வரிசையில் இலங்கை நான்காவது இடத்தில் இருப்பதாக ஜேர்மன் வொச் அமைப்பின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இலங்கை இந்த அமைப்பினால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும், உலகிலேயே அனர்த்தங்கள் குறைவான மக்கள் வாழ்வதற்கு மிகவும் சிறந்த நாடாக காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

உலகில் அனர்த்தங்கள் அதிகம் இடம்பெறும் நாடுகள் வரிசையில் ஹயிட் முதலாம் இடத்தில் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

அடுத்ததாக முறையே சிம்பாபே, பீஜி ஆகிய நாடுகள் இரண்டாம் மூன்றாம் இடங்களில் காணப்படுகின்றன.

வியட்நாம், இந்தியா என்பன இலங்கைக்கு அடுத்த கட்டத்தில் அமைந்துள்ளன. புள்ளிவிபரங்களின் அடிப்படையில் இலங்கைக்கு 11.50 புள்ளிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தேசிய சகோதர நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ஆ)



# வேஷம் கலையேக்கைப் பாப்பம். ஆர் எவர் எண்டு?

சனம் கெஞ்சி மண்ணாடி, கும்பிட்டுக் கூத்தாடி, அழுது குளறினாப் பிறகு இப்ப வலிகாமம் வடக்கிலை தாங்கள் பிடிச்சு வைச்சிருந்த 36 ஏக்கர் காணியை ஆமிக்காரர் விட்டிருக்கினம். அதுகும் தங்களுக்குத் தங்கடை சம்பந்த பகுதியைலை குடுத்த சீதனக் காணியள் மாதிரி வைச்சிருந்திட்டு குடுக்க மனமில்லாமல் குடுத்திருக்கினம். எட விழுவாங்களே உது பாவப்பட்ட தமிழ் சனத்தின்ரை காணியளடா எண்டு சொன்னாலும் கேக்காமல் இருந்திட்டு இப்ப என்ன புத்தி வந்ததோ தெரியாது சீட்டெண்டு விட்டிருக்கினம். அதுகும் ஆமான றோட்டுக் கிடையாது. எல்லை தெரியாது. கிடக்கிற ஒண்டிரண்டு வீடுகளும் உடைஞ்சு சேதமாக் கிடக்கு. மரந்தடியள் வளந்துபோய் காடு வத்திப்போய் கிடக்கு. விட்ட உடனை அவையின்ரை காம்புக்குப் போற பாதையாலைதான் சனம் போய் தங்கடை காணியளையும், வீடுகளையும் பாத்தவை. இப்பில் இப்பில் மரங்கள் வளந்து இடக்கு முடக்காக் கிடக்கிறதைப் பாத்தால் எதைப்பிடிச்சு எல்லையை வைக்கிறதெண்ட யோசனை சனத்துக்கு.

எத்தினை பேருக்குத் தங்கடை காணி பூமியைப் பாக்க விசராக்கிடக்கும். தாங்கள் பிறந்து வளந்து தவண்டு விளையாடின பூமி பாழ்பட்டுப் போய்க்கிடக்கிறதைப் பாக்க என்ன மாதிரி இருந்திருக்கும்? நாங்கள் தமிழ் சனத்தின்ரை காணியளை விட்டிட்டம் எண்டு அவை கெட்டித்தனம் பேசிறதைப்பாத்தால் ஏதோ உடனை போய் நாளைக்கே குடியேறக் கூடிய மாதிரி காணி கிடக்கிறதா எண்ணி விடாதையுங்கோ. செல் அடிச்சு வீடெல்லாத்தையும் அழிச்சுப் பத்தை வளர விட்டுக்கிடக்கு. அந்தப் பத்தையளை வெட்டித் துப்பரவாக்கவே மாசக் கணக்காகும். கிணறுகள் இருக்கிறவை துப்பரவாக்க வேணும். அதுகும் வருசக்கணக்கா இறைச்சுத் துப்பரவாக்காத கிணறுகளிலை தண்ணி கட்டாயம் நஞ்சாத்தானிருக்கும். அப்ப அதைக் குடிக்கலாமோ? இன்னும் மாசக்கணக்காகக் கஷ்டப்பட்டுத்தான் உதை பொருளாக்கலாம். காணியை விட்டிட்டினம் எண்டாப்போலை சனத்தின்ரை கஷ்டப்பாடு தீந்துபோச்சுதெண்டு நினைக்கப்பிடாது. இன்னும் சனத்துக்குக் கஷ்டம் இருக்கு.

"உதை உருப்படியாக்க ஒரு தொகை காசு வேணும் நான் ஆரிட்டைப்போக" எண்டு ஒரு அம்மா அழுது புலம்பிறா. "எணை டி.எஸ் ஒபிசிலை உதுக்கெல்லாம் காசு குடுக்கினமாம்" எண்டு அங்கை நிண்ட ஒரு ஆள் சொல்ல மனுசிக்குக் கோவம் வந்திட்டுது. "அங்கை என்ன இந்தா கொண்டு போனை எண்டு சும்மா தூக்கித் தரப் போகினமோ? எத்தினை போம் நிரப்பி எத்தினைபேரிட்டை கையெழுத்து வேண்டி அங்கையும், இஞ்சையும் எத்தினை தரம் நடந்து திரிய வேணும் எண்டு தெரியுமோ? சுகமாச் சொல்லிப் போடுவினம் டி.எஸ் ஒபிஸ் தரும் எண்டு. ஆனால் அவையளிலும் பிழை சொல்லேலாது. முன்னம் கண்டபடி எல்லாம் குடுத்தவை. எங்கடை ஆக்கள் கள்ள விளையாட்டு விளையாடினதைக் கண்டு பிடிச்சாப்பிறகுதான் அவை எல்லாத்தையும் கடுங் கொன்றோலாக்கினவை. சண்டைக்குப் பயந்து வெளி நாடுகளுக்கு ஓடிப்போன கிறவுட் இப்ப வந்து நிண்டு கொண்டு ஜீ.எஸ்ஸுக்குக் கையிலை வைச்சு தங்கடை பழைய ஐ.சீயைக் காட்டி விளையாடினதைக் கண்டு பிடிச்சுப் போட்டினம். அதாலை தான் வலு கஷ்டமாக்கிடக்கு. ஒபிஸர்மாருக்கும் சனத்திலை இருந்த மதிப்பு மரியாதை எல்லாம் குறைஞ்சதாலைதான் அவங்களும் நிவாரணத்தையும், நட்ட ஈட்டையும் குடுக்க முன்னம் அறுபது கையெழுத்தையும் வாங்கினம். கன டொக்கிமெண்டையும் கேட்டு இண்டைக்கு வாங்கோ. நாளைக்கு வாங்கோ எண்டு இழுத்தடிப்பும் செய்யினம்..

சில சனம் செய்யிற சுத்துமாத்தாலை உண்மையாக் கிடைக்க வேண்டிய சனத்துக்கும் வாய்ப்பு கிடைக்கிறேல்லை. எல்லா விசியத்திலையும் எங்கடை சனம் பல பிழையளை விட்டதாலை பெரும் பிரச்சினை வளந்திட்டுது. எனக்குத் தெரியும் பல பேர் சுத்துமாத்துச் செய்து பிடிபட்டவை எண்டு. நாங்கள் இப்ப முந்தின மாதிரி இல்லை. சுணைக்கெட்ட சமூகமா மாறிப்போனம். அப்பிடி எல்லாம் மாறினது எண்டு சொல்லேலாது. சாவட்டையளும், சப்பியளுந்தான் மாறிக் கொண்டு நல்லாக்கள் மாதிரி வேஷம் போடினம். வேஷம் எத்தினை நாளைக்கு எண்டு பாப்பம்? வேஷம் கலையேக்கை அவை படப்போற பாட்டைப் பாருங்கோவன்.

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## சுயாட்சி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் இதனைத் தெரிவித்தார். "இன்றைய கூட்டம் முக்கியமானது. தமிழ் மக்கள் பேரவை தனது பணிகளை விரிவடையச் செய்ய வேண்டிய காலம் தற்போது கனிந்துள்ளது. இவ்வாறான விரிவுபடுத்தலுக்கு எமக்கு உறுதுணையாக இருக்கப் போவது எமது இளையோர்களே! இன்று வடகிழக்கு மாகாணங்களில் வலுப்படுத்த வேண்டிய ஒரு சமூக அலகாக வலம் வருவது இளையோர்களே!

"வலுப்படுத்த வேண்டிய" என்று கூறும் போது உடல் ரீதியாக என்பது அர்த்தமில்லை. ஆத்மீக ரீதியாக கொள்கை ரீதியாக, அவர்கள் வலுப்பெற வேண்டிய ஒரு கால கட்டம் ஜனித்துள்ளது.

இன்றைய இளைஞர் குழாம் பல விதங்களில் முன்னைய காலத்தில் வாழ்ந்த எம்மவர்களில் இருந்து வித்தியாசமானவர்கள். நாம் வயதுக்கும் முதுமைக்கும் மதிப்புக் கொடுத்தோம். இன்று அப்படியில்லை. இன்றைய பிள்ளைகள் உலக விடயங்கள் பலதையும் பத்துப் பதினைந்து வயதுக்கு முன்னரே அறிந்து கொள்கின்றார்கள். உலக ஞானம் அவர்களுக்கு நிரம்பவும் உண்டு.

கைபேசிகள், கணினிகள், தொலைக்காட்சிகள் போன்றவை சதா அவ்வாறான ஞானத்தைக் கொடுத்துக்கொண்டே உள்ளன. அதே போல் சுயநலமும் அவர்களுக்கு அதிகம். உலக ஞானத்தில் திளைத்தவர்கள் பொதுவாகவே சுயநலமிகளாக இருப்பார்கள் என்பது ஞானிகளின் கருத்து.

தமிழ் மக்கள் பேரவை யாவரையும் உள்ளடக்கிய ஒரு மக்கள் இயக்கம். எமது தமிழ் மக்களை அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வழி நடத்துவது எமது கடமையாகும். இதுவரை காலமும் எமது அரசியல் கொள்கைகளை முன் வைத்து கூட்டங்கள் வைத்து மக்களுக்கு அரசியல் அறிவைப் புகட்டி வந்துள்ளோம். தொடர்ந்தும் அதனைச் செய்யவே இருக்கின்றோம். ஆனால் எமது காலத்தின் பின்னர் எமது அரசியல் சமூக அமைப்புக்களைக் கொண்டு நடத்தப் போவது இளையோர்களே.

திடீர் என்று தலைமைத்துவம் அவர்கள் வசம் செல்வதிலும் பார்க்க இப்பொழுதிருந்தே அவர்கள் தமது காரியங்களை, கடப்பாடுகளை, கடமைகளை உணர்ந்து நடக்கத் தொடங்கினால் அது நன்மை தரும் என்று நம்புகின்றோம்.

இதன் காரணத்தால்தான் தமிழ் மக்கள் பேரவை இளைஞர் மகாநாடு ஒன்றினை நடத்த வேண்டும் என்று முடிவெடுத்தது. இவ்வாறான மகாநாடுகளில் நாங்கள் சில விடயங்களை வலியுறுத்த உள்ளோம். அரசியல் ரீதியாக நாங்கள் அவர்களுக்கு சில அடிப்படை விடயங்களை எடுத்துக் கூற வேண்டியுள்ளது. சமூக ரீதியாகவும் சில விடயங்களை அவர்களுக்கு வலியுறுத்த விரும்புகின்றோம்.

முதலில் அரசியலை எடுத்துக் கொள்வோம். எமக்கென சில உரித்துக்கள் உண்டென்று சர்வதேசச் சட்ட நூல்கள் கூறுகின்றன. இந்த நாட்டின் ஆதிக் குடியினரின் வழிவந்தவர்கள் என்பதால் தமிழர்களாகிய எமக்கு நாம் வாழும் இடங்களில் சுயாட்சி கோர சட்டப்படி உரித்து இருக்கின்றது. மேலும் எமக்கு எம்முடைய கலை, மொழி, கலாசாரம் போன்றவற்றை சுதந்திரமாகப் பாவித்து பாதுகாத்து வர உரித்துண்டு.

நாம் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் நிலம் மேல் எமக்கு உரித்துண்டு. நிலங்களின் வளங்களை எடுத்துப் பாவிக்க உரித்துண்டு. நாம் இந்த நாட்டின் மூத்த குடிகள் என்ற முறையில் எமக்கு சில உரிமைகள் உரித்துக்கள் உண்டு என்பதை இதுகாறும் மறந்துவிட்டோம்.

பாரம்பரிய மூத்த குடிகள் பற்றிய உரித்துக்களை உள்ளடக்கியுள்ள ஐக்கிய நாடுகள் விளம்பல் ஆவணத்தில் அவை இடம் பெற்றுள்ளன. 46 சரத்துக்களைக் கொண்ட அதில் பல உரித்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பரிசீலனை செய்தல் நன்மை பயக்கும்.

இன்று எம்மிடையே ஒரு வித பலவீனம் உருவாகியுள்ளது. இது இளையோர்களிடமும் காணப்படுகின்றது. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதும் நாம் தோற்றுவிட்டோம் என்ற ஒரு மனோநிலை எங்கள் மனதில் குடிகொள்ளத் தொடங்கியுள்ளது. எமது எதிர்பார்ப்புக்களை நடைமுறைப்படுத்த இனி யார் வரப் போகின்றார் என்ற ஒரு நம்பிக்கை அற்ற நிலை எட்டிப் பார்க்கத் தொடங்கியுள்ளது.

இதனை மாற்றி எம் இளையோர்கள் மனதில் வலுவேற்றுவது எமது பொறுப்பு.

உலக அதி கூடிய எடைக்குரிய குத்துச் சண்டை வெற்றி வீரனாக ஒரு காலத்தில் வலம் வந்த மொகமட் அலி குத்துச் சண்டை அரங்கினுள் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்திருக்கின்றீர்களோ எனக்குத் தெரியாது.

வலையத்தளங்களில் இப்போதும் பார்க்கலாம். அரங்கினுள் நடனமாடுவது போல் அங்கும் இங்குமாக வலம் வருவார். அவர் தன்முகத்துக்கு எதிரியின் எந்த ஒரு குத்தும் படாமல் பார்த்துக் கொள்வார். எதிரியின் குத்துக்கள் பலமாக இருந்தால் தன் கைகளுக்குள் எதிரியின் தலையைப் பிடித்து தொடர்ந்து அவர் குத்த முடியாமல் ஆக்கிவிடுவார்.

மத்தியஸ்தர் அப்போது இருவரையும் பிரித்து விடுவார்.

இவ்வாறே நடனமாடி சுற்றுக்களை ஒவ்வொன்றாக முடித்துக் கொண்டு எதிரியைப் பலம் இழக்கச் செய்வார். அதாவது பலம் கொண்ட மட்டில் எதிரி குத்த எத்தனித்து எத்தனித்து அவை வீண்போகவே தனது பலத்தை மெல்ல மெல்ல அவர் இழக்கத் தொடங்கிவிடுவார். முகமட் அலி நடனமாடிக் கொண்டு அவரிடம் இருந்து தப்பிப் போய் கொண்டிருப்பார்.

திடீரென்று ஒரு சுற்றில் அலியின் குத்துக்கள் எதிரியின் மீது சரமாரியாகப் பொழிய அவர் சுருண்டு நிலத்தில் விழுந்து விடுவார். அலி வெற்றிவாகை சூடுவார்.

இதனை எதற்காக இங்கு கூறினேன் என்று நினைப்பீர்கள். காரணம் இருக்கின்றது. எமக்கு உரிக்குக்களைக் தரமறுக்கும் சிங்கள அரசியல் தலைமைத்துவம் தற்போது வலுக்குறைந்து வருகின்றது. அரசியல் பிரச்சனைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், கடன் சுமைகள், சர்வதேசத்தில் கடுமையான சாடல்களுக்கு உள்ளாகி வருவது இவ்வாறான பல இடர்களைச் சந்தித்து வருகின்றது சிங்களத் தலைமைத்துவம். சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை இயற்றாமல் இருந்து மேலும் மேலும் தவணை கேட்பது அரசின்மேல் உலக நாடுகளுக்கு இருக்கும் மதிப்பைக் குறைத்துக் கொண்டு வருகின்றது. இந்த நேரத்தில் நாங்கள் மொகமட் அலியிடம் இருந்து பாடம் படித்துக் கொள்ள வேண்டும்.

அதாவது இத்தருணத்தில்தான் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு எமக்கு நேர்ந்த, நேர்ந்துகொண்டிருக்கும் இடர்களைப் பற்றி எல்லாம் உலகறியச் செய்ய வேண்டும். சுயாட்சியை வழங்க அவர்களே முன்வர வேண்டும். ஒரு கட்டத்தில் தமது தேவையின் நிமித்தம் எமக்குரிய சுயாட்சி உரிமையை அவர்கள் கையளிக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் என்பதில் நாங்கள் திடமான நம்பிக்கை வைக்க வேண்டும். நம்பிக்கை ஒளி மலரத் தொடங்கினால் இளையோர்கள் ஏன் நாம் எல்லோருமே புதுத்தென்பு பெறத் தொடங்கி விடுவோம். ஆகவே இளையோர்களின் மனதில் புதுத் தென்பை உண்டாக்க எமது தமிழ் மக்கள் பேரவை பிரயத்தனங்களில் ஈடுபட வேண்டும். எமது தன்னம்பிக்கையே எமது நிலையான சொத்து.

இன்று இளையோர்கள் மட்டத்தில் நம்பிக்கையீனம் குடிகொண்டதால்தான் அவர்கள் சில தகாத வழிகளிலே செல்ல எத்தனிக்கின்றார்கள்.

பரீட்சைகளில் போதிய புள்ளிகள் இல்லாமை, மனதில் குறிக்கோள் இல்லாமை, குடும்பங்களுக்குள் ஏச்சுப் பேச்சுக்கள் என்று பல காரணங்களைக் கூறலாம். சிலருக்கு வெளிநாட்டுப் பணம் வந்து சேர்வதால் அதனைப் பாவிக்கத் தெரியாமல் திண்டாடும் நிலமையும் அவர்களை ஆத்திரம் அடைய வைக்கின்றது. சிலர் வெளிநாட்டுப் பணத்தை உபயோகித்து மோட்டார் சைக்கிள்களை வாங்குகின்றார்கள். மது அருந்துகின்றார்கள். வாக்குவாதங்களில் ஈடுபடுகின்றார்கள். வன்செயலிலும் ஈடுபடுகின்றார்கள். அவர்கள் மனதில் குறிக்கோள் இல்லாததே இதற்குக் காரணம். ஒன்றில் உயர் கல்வி ரீதியாக நான் இந்தவாறாக வருவேன் என்ற ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். அல்லது விளையாட்டு ரீதியாக அவ்வாறான குறிக்கோள்கள் இருக்கலாம் அல்லது வணிக ரீதியாகக் குறிக்கோள்கள் இருக்கலாம். இல்லை என்றால் ஏதாவது ஒரு சமயம் சார்பான குறிக்கோள்கள் கூட இருக்கலாம்.

குறிக்கோள்கள் அவசியம் என்பது எம் எல்லோருக்குந் தெரியும். ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் கனவு காணச் சொன்னார். எமது குறிக்கோள்கள் செயற்படுத்தப்படுவன என்று கனாக் காண வேண்டும்.

அரசியல் ரீதியாக ஒரு குறிக்கோளையும் அதனை அடையும் வழிமுறைகளையும் நாம் இளையோர்களுக்குச் சொல்லிக் கொடுத்தோமானால் அவர்களை நாம் எமது சமூகத்தின் மிக வலுவான ஒரு அலகாக மாற்றியமைக்க முடியும்.

ஆகவேதான் இளைஞர் கருத்தரங்கங்களை தமிழ் மக்கள் பேரவை ஒழுங்குபடுத்த முன் வந்தமையின் காரணத்தை இப்பொழுது நீங்கள் ஓரளவு உணர்ந்திருப்பீர்கள்.

இவ்வாறான ஒரு எண்ணம் என்னுள் பரிணமித்தது எப்பொழுது என்று கேட்டீர்களானால் எனது விடை நகைச்சுவையாக இருக்கும்.

என்னைப் பதவியில் இருந்து விரட்ட எம் மாகாண சபை உறுப்பினர்கள் பல சதிகளில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் "நாம் உங்களுடன்" என்று இளைஞர்கள் ஒன்று கூடித் தமது ஆதரவை வெளிப்படுத்திய போது நான் ஒன்றைக் கூறினேன். அது நன்றிப் பெருக்கில் என்னை அறியாது வெளிவந்த சொற்கள். "நானும் உங்களுடன் இருப்பேன்" என்று கூறினேன். பதவி பறி போகின்றதோ இல்லையோ "நான் உங்களுடன்" என்ற போது தான் என்னால் இளைய சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் என்ன என்ற கேள்வி உதித்தது.

இளைஞர்களின் பலத்தை நன்மைக்கும் பாவிக்கலாம். தீயனவற்றிற்கும் பாவிக்கலாம். தமிழ் மக்கள் பேரவை அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்து குறிக்கோள்களைக் கொடுத்து மதிப்பையும் கொடுக்க முன் வந்தால் அவர்கள் சமூகத்தின் ஆர்வலர்களாக மாறிவிடுவார்கள் என்ற முடிவுக்கு வந்தேன்" -என்றும் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். (அ)

## தமிழ் இராணு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்வத்துடன் முன்வர வேண்டும்" என்று யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி கோரினார்.

இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்தால் இராணுவம் சாராத வேலைகளுக்கு இளையோர்கள் ஆட்சேர்ப்புச் செய்யும் நிகழ்வு நேற்று நெல்லியடியில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்தில் உள்ள படைத்துறை சாராத வேலைகளுக்கு உடனடியாக 50 இளையோரை ஆட்சேர்ப்பு செய்கின்றோம். இவர்களுக்கு வருகின்ற மூன்று வார காலங்களுக்கு இடையில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இருப்பினும் இந்த எண்ணிக்கையை அதிகரித்து 100 பேருக்கு நியமனம் வழங்குவது குறித்து நான் சாதகமாகப் பரிசீலிக்கின்றேன். இராணுவத்தில் உள்ள இராணுவம் சாராத ஊழியர்களும் அனைத்து வகையிலும் இராணுவ வீரர்களைப் போலவே கௌரவமாக எம்மால் நடத்தப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் கணிசமான தமிழ் இளையோர் இராணுவத்தில் உள்ள இராணுவம் சாராத வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களிடம் நேரடியாக வினவி அவர்களை நாம் நடத்துகின்ற விதம் குறித்து நீங்களாகவே அறிந்து கொள்ளலாம்.

அதே நேரத்தில் இராணுவத்தில் கணிசமான அளவில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ் இளையோர்கள் இணைதல் வேண்டும். இது சிங்கள இராணுவம் அல்ல. எல்லா இனத்தவர்களுக்குமான இராணுவம் ஆகும். 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட இளையோர்கள் இராணுவத்தில் இணைய முடியும். யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளையோர்கள் இராணுவத்தில் இணைகின்ற பட்சத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே பணியாற்ற முடியும். தினமும் கடமையை நிறைவு செய்து வீட்டுக்கும் சென்று வர முடியும். யாழ்ப்பாணத்தில் தமிழ் இளையோர் கணிசமான அளவில் இராணுவத்தில் இணைவதன் மூலம் தமிழ் இராணுவத்தை இங்கு உருவாக்க முடியும்" என்றும் அவர் தெரிவித்தார்.

## 36 ஏக்கர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று விடுவிக்கப்பட்டன. ஆயினும் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையூடான மாங்கொல்லை காணி வீடுகள் விடுவிக்கப்பட்டவில்லை. அவை தொடர்ந்தும் பொலிஸாரிடமும், இராணுவத்தினரினதும் பாவனையிலேயே இருக்கின்றன.

இதனால் காங்கேசன்துறை செல்லப்பிள்ளையார் கோயில் பின்பகுதியூடாகவோ, மாம்பிராய் உள்வீதியூடாகவோ விடுவிக்கப்பட்ட காணிக்குள் செல்லவேண்டியுள்ளது.

மக்கள் தமது வீடுகளையோ, ஒழுங்கைகளையோ இனங்காண முடியவில்லை இராணுவத்தினர் பயன்படுத்திய வீதியூடகவே செல்ல வேண்டியுள்ளது. அங்குள்ள வீடுகள் சில உடைக்கப்பட்டுள்ளன.

மாம்பிராய் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டாலும் மாங்கொல்லை காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. அங்கிருந்த நரசிம்ம வைரவர் கோயில் இன்னமும் இராணுவவேலிக்குள்ளேயே உள்ளது.

இதேவேளை, தமது சொந்தக் காணிகளை துப்புரவு செய்து மீள்குடியேறுவதற்கு வலி.வடக்கு பிரதேச செயலக மீள்குடியேற்றச் செயலணி அதிகாரிகள் தமக்கு உதவி செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## 600 ஏக்கர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 600 ஏக்கர் காணி விடுவிக்கப்படலாமெனத் தெரிகிறது.

பிரதமரின் அறிவிப்பையடுத்து, அடுத்த ஆறு மாதங்களுக்குள் இந்தக் காணிகள் விடப்படவுள்ளன.

யாழ்.நகரத்தில் வைத்தியசாலை வீதியிலுள்ள படைமுகாம்கள், ஏ9 வீதியில் கிளிநொச்சி பகுதியிலுள்ள படைமுகாம்களும் அகற்றப்படலாமெனத் தெரிகிறது. இந்த முகாம்களை அகற்ற ஆறு மாதங்கள் தேவையென படைத்தரப்பு அரசிடம் கோரியுள்ளது. அதற்கான அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

திங்கட் கிழமை பிரதமர் காணி விடுவிப்பு பற்றிய அறிவித்தல் விடுத்ததும், இடங்களைக் காலி செய்யும் பணியைப் படையினர் ஆரம்பிப்பார்கள்.

நாளை திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில், யாழ் மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கூட்டமும் நடக்கவுள்ளது. இதற்கான அழைப்புக்களை யாழ் மாவட்ட செயலாளர் ந.வேதநாயகன்- முதலமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளார். (அ)

## அமைச்சர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வாழ்வாதார பொருட்கள் வழங்கும் நிகழ்வு மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனின் தலைமையில் முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் வருகை தந்ததை அறிந்த கேப்பாபிலவு நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் அமைச்சரிடம் தமது காணி விடுவிப்புத் தொடர்பில் கலந்துரையாட வந்தனர்.

நிகழ்வு முடிந்து வெளியேற முயன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவசக்தி ஆனந்தன், வடமாகாண விவசாய 'அமைச்சர் க .சிவநேசன், வடமாகாண சபை உறுப்பினர்களான து. ரவிகரன், ஆ.புவனேஸ்வரன் மற்றும் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோரை வெளியேறவிடாது மக்கள் தடுத்து நிறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நிகழ்வு முடிந்து வெளியேறிய மீள் குடியேற்ற அமைச்சரையும் கேப்பாபிலவு காணி மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பொதுமக்கள் கரைதுரைப்பற்று நுழைவாசலில் நின்று வழிமறித்தனர்.

இதன்போது அரசியல்வாதிகளைக் கண்ட அமைச்சர் "என்ன இங்கையும் வழிமறிக்கிறீர்களா?" என்று கேட்டவாறு மக்களுக்கு அருகில் சென்றார். இதன்போது, தங்களது காணிகளை இராணுவத்தினரிடம் இருந்து மீட்பது தொடர்பில் முன்னேற்றம் கிடைக்கவில்லை என கேப்பாபிலவு மக்கள் கவலை தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக மக்களது கேள்விகளுக்கு, சரியான பதில் வழங்கமுடியாத நிலையில் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களது உதவியோடு, மக்களை உதறித்தள்ளிவிட்டு அமைச்சர் சுவாமிநாதன் தலைதெறிக்கும் வேகத்தில் தப்பிச் சென்றார். (அ)



### நம்பிக்கை வாக்கெடுப்பு:

# குமாரசாமி வெற்றி: பா.ஜ.க வெளிநடப்பு!

பெங்களூர், மே 27

முதலமைச்சர் குமாரசாமியின் ஆட்சி மீதான நம்பிக்கை தீர்மானத்தின் மீது, கர்நாடக சட்டசபையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் 117 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுடன் முதலமைச்சர் குமாரசாமி வெற்றி பெற்றார். தொடர்ந்து பா.ஜ.க. வெளிநடப்புச் செய்தது.

சமீபத்தில் நடைபெற்ற கர்நாடக சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இடங்கள் கிடைக்கவில்லை. இதையடுத்து, காங்கிரஸ் மற்றும் மத சார்பற்ற ஜனதா தளம் ஆகிய கட்சிகள் கூட்டணி ஆட்சி அமைக்கத் தீர்மானித்தன.

இந்த நிலையில், ம.ஜ.த. தலைவர் குமாரசாமி முலமைச்சராகப் பதவியேற்றார். அவருடன் துணை முதலமைச்சராக கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவர் பரமேஸ்வராவும் பதவியேற்றார்.

இவர்கள் இருவரைத் தவிர மேலும் 32 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்க உள்ளனர். இதில், காங்கிரஸுக்கு 22 அமைச்சர் பதவிகளும், ம.ஜ.தவுக்கு 12 அமைச்சர் பதவிகளும் அடக்கம். சபாநாயகராக காங்கிரஸ் எம்.எல்.ஏ ரமேஷ்குமார் தேர்வு செய்யப்பட்டார். கர்நாடக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராக பா.ஜ.கவின் எடியூரப்பா தேர்வு செய்யப்பட்டார்.

இந்த நிலையில், முதலமைச்சர் குமாரசாமி ஆட்சி மீதான நம்பிக்கை தீர்மானித்தின் மீது வாக்கெடுப்பு நடைபெற்றது. தொடர்ந்து எடியூரப்பா பேசினார்.

அவருடைய பேச்சின் இடையிடையே காங்கிரஸ் உறுப்பினர்கள் சத்தமாகச் சிரித்தனர். முதலமைச்சர்குமாரசாமியும் இடையில் எழுந்து பேசினார். பின்னர் பா.ஜ.க. உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக அவையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதைத்தொடர்ந்து, அவையில் இருந்த 117 எம்.எல்.ஏ.க்கள் குரல் வாக்கெடுப்பின் மூலம் ஆதரவளித்தனர். இதனைத் தொடர்ந்து குமாரசாமி தாக்கல் செய்த நம்பிக்கை தீர்மானம் வெற்றி பெற்றதாக சபாநாயகர் ரமேஷ் குமார் அறிவித்தார். (ஆ)

# அனுமதியின்றி இயங்கிய தூத்துக்குடி ஆலை!

சென்னை, மே 27

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை பலமுறை அனுமதி இல்லாமல் இயங்கியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி தூத்துக்குடி நகர மக்கள் நேற்றுடன் 104 ஆவது நாளாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டு மாசுக்கட்டுப்பாட்டுப் வாரியமும், தூத்துக்குடி கோட்ட வளர்ச்சி அதிகாரியும் ஸ்டெர்லைட் ஆலை வளாகத்துக்குள் 7 இடங்களிலும், அதைச் சுற்றி உள்ள 8 கிராமங்களில் நிலத்தடி நீரை எடுத்துச் சோதனை நடத்தினர். இந்தச் சோதனையில் அனுமதிக்கப்பட்ட அளவை விட பல மடங்கு நிலத்தடி நீர் மாசுபட்டு இருந்தது தெரிய வந்தது. அதிக அளவு ஈயத் தாது தண்ணீரில் கலந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மடத்தூர், காயலூரணி, தெற்கு வீரபாண்டியபுரம், குமரெட்டியபுரம், சில்வர்புரம், பண்டாரம்பட்டி, மீளவிட்டான் ஆகிய கிராமங்களில் இவ்வாறு நிலத்தடி நீர் மக்களின் உடல்நலத்தை கெடுக்கும் வகையில் மாசுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

கிராம மக்களிடம் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் எச்சரிக்கை செய்து இருக்கவேண்டும். ஆனால், அது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வெளியே வரும் வரை இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர் நித்யானந்த் ஜெயராமன் குற்றம் சாட்டியுள்ளார். (ஆ)

# எம்.எச் -17 விமானச் சூட்டுக்கும் ரஷ்யாவுக்கும் தொடர்பு இல்லை

### புடின் மறுப்பு



மொஸ்கோ, மே 27

கடந்த 2014 ஆம் ஆண்டு சுட்டு வீழ்த்தப்பட்ட மலேசிய விமானத்துக்கும், எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் கடந்த 2014 ஆம் ஆண்டு அரசியலில் குழப்ப நிலை ஏற்பட்டது. இதனால், கிரீமியா பகுதி மக்கள் ரஷ்ய கூட்டமைப்பில் இணைய விருப்பம் தெரிவித்தனர். இதனால், ரஷ்ய இராணுவப் படை கடந்த 2014 ஆம் ஆண்டு கிழக்கு உக்ரைன்பகுதிக்குள் ஊடுருவி கிரீமியா பகுதியை மீண்டும் ரஷ்யாவுடன் இணைத்தது.

இந்தநிலையில், அதே ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி மலேசிய ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் எம்.எச்.-17 விமானம் ஆம்ஸ்டர்டாம் நகரில் இருந்து மலேசியத் தலைநகர் கோலாலம்பூர் நோக்கி 298 பயணிகளுடன் சென்றது. அப்போது ஒரு ஏவுகணை அந்த விமானத்தைத் தாக்கியதில் அதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது யார் என அறிய சர்வதேச அளவில் கூட்டு விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவின் விசாரணை அறிக்கையின்படி, ரஷ்யாவின் விமான எதிர்ப்பு ஏவுகணை பிரிவிலிருந்துதான் பக்-டெலர் ரக ஏவுகணை ஏவப்பட்டு மலேசிய விமானம் வீழ்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, நெதர்லாந்து நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்டெப் பிளாக், விமானம் தாக்கப்பட்ட சம்பவத்தில் ரஷ்யாவுக்கு நேரடித் தொடர்பு உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஸ்டெப் பிளாக்கின் இந்தக் கருத்து சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இது தொடர்பில் விளக்கம் அளித்துள்ளார். (ஆ)

# மலேசிய பிரதமர் வீட்டில் 204 கோடி ரூபா பறிமுதல்

கோலாலம்பூர், மே 27

மலேசிய முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக் வீட்டில் நடந்த சோதனையில், 204 கோடி ரூபா பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


தென் கிழக்கு ஆசிய நாடான மலேசியாவில், நாடாளுமன்றத் தேர்தல் சமீபத்தில் நடந்தது.


இதில், மஹாதிர் முகமது தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி வெற்றி பெற்றது. இங்கு, 60 ஆண்டுகளுக்கு பின் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இதையடுத்து, முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக் மீதான வழக்குகளில் தற்போதைய அரசு தீவிரம் காட்டி வருகிறது.

மலேசிய மேம்பாட்டு நிறுவனம் மூலம் பல கோடி ஷரூபா மோசடியில் நஜீப் ஈடுபட்டதாக, வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடக்கிறது.

அவர் நாட்டை விட்டு வெளியேறவும் தடை விதிக்கப்பட்டது. சமீபத்தில் பண மோசடி வழக்குத் தொடர்பாக நஜீப் ரசாக்கின் வீடு, அவருக்குச் சொந்தமான அலுவலகம் உள்ளிட்ட ஐந்து இடங்களில் பொலிஸார் சோதனை நடத்தினர். இதில், முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

அவருடைய சொகுசு பங்களாவில், 35 மூடைகளில் இருந்து, 204 கோடி ரூபா பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் விலை உயர்ந்த கடிகாரங்கள், நகைகள் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டன. (ஆ)





# சினிமாவில் ஆணாதிக்கம்

### ஸ்ரேயா வருத்தம்

சென்னை, மே 27

தமிழில் முன்னணி நடிகையாக வலம் வந்த ஸ்ரேயா, சினிமாவில் ஆணாதிக்கம் அதிகம் இருப்பதாகக் கூறியுள்ளார்.

வெளிநாட்டுக் காதலரைத் திருமணம் செய்துகொண்ட ஸ்ரேயா மீண்டும் நடிக்க வந்துள்ளார்.


தனக்கு முக்கியத்துவம் தரும் கதைகளாகக் கேட்டுவரும் ஸ்ரேயா தமிழ் சினிமாவைச் சாடியுள்ளார்.

"என்னைத் தேடிப் பல பட வாய்ப்புகள் வருகின்றன. ஆனால் கதை பிடிக்காமல் தவிர்த்து விடுகிறேன்.

அனைத்துப் படங்களிலுமே ஆணாதிக்கம் அதிகமாக உள்ளது. நடிகைகளின் முக்கியத்துவம் குறைவாக உள்ளது.

கதை சொல்லும்போது பெரிதாகத் தெரியும் கதாபாத்திரம் படம் வரும்போது சிறியதாக மாறிவிடுகிறது. தமிழை விட தெலுங்கில் தான் எனக்கு அழுத்தமான கதாபாத்திரங்கள் கிடைத்தன" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரேயா தமிழில் ரஜினியுடன் சிவாஜி, விஜய்யுடன் அழகிய தமிழ் மகன் உட்பட பல படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



### 70 பெண்களிடம் அத்துமீறல்:

# பொலிஸில் சரணடைந்தார் ஹொலிவுட் தயாரிப்பாளர்!

நடிகை ஏஞ்சலினா ஜோலி உட்பட 70 பெண்களிடம் பாலியல் அத்துமீறல் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள பிரபல ஹொலிவுட் தயாரிப்பாளர் ஹார்வே வெயின்ஸ்டீன் நியூயோர்க் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.


ஹொலிவுட் பிரபலங்களான ஏஞ்சலினா ஜோலி, லூசியா இவான்ஸ் உள்ளிட்ட சுமார் 70 பெண்களிடம் பாலியல் ரீதியாக ஹார்வே தவறாக நடந்து கொண்டார் என, பாதிக்கப்பட்டவர்கள் அவர் மீது வெளிப்படையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

மேலும் #MeToo movement என்ற 'ஹேஷ்டேக்' உடன் பலர் தாங்களும் இவரது வலையில் வீழ்ந்தோம் எனக் கூறி, சமூக வலைத்தளங்களில் தகவல்களைப் பரிமாறி வருகின்றனர்.

ஆனால், தன்மீதான குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து மறுத்துவந்த ஹார்வே, "எதிர்பாலினத்தவர்களின் சம்மதத்துடன் அவர்களுடன் உறவு வைத்துகொண்டதாகவும், நான் யாரையும் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தவில்லை." என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், நியூயோர்க் நகரில் உள்ள மன்ஹாட்டன் பொலிஸ் நிலையத்தில் ஹார்வே வெயின்ஸ்டீன் சரணடைந்துள்ளார். இதனைத் தொடந்து அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஆ)

# ஜீரணிக்க முடியவில்லையே!




கொல்கத்தா, மே 27

ஹைதராபாத் அணியுடனான ஆட்டத்தில் போராடித் தோல்வி அடைந்ததை ஜீரணிக்க முடியவில்லை என கொல்கத்தா அணிக் கப்டன் தினேஷ் கார்த்திக் கூறியுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தா அணி ஹைதராபாத்திடம் தோற்று இறுதி ஆட்டத்துக் கான வாய்ப்பை இழந்தது.


இந்தத் தோல்வி குறித்து கொல்கத்தா அணி யின் கப்டனும், சென்னையைச் சேர்ந்தவருமான தினேஷ் கார்த்திக் கூறியதாவது:-

இந்தத் தோல்வியை ஜீரணிக்கக் கடின மாக இருக்கிறது. இந்தத் தொடர்முழுவதும் நாங்கள் சிறப்பாக ஆடினோம். இந்தப் போட் டியில் தோற்றது சிறப்பானதாக இல்லை. இலக்கை விரட்டத் தொடங்கும் போது எங்கள் பக்கமே ஆட்டம் இருந்தது. ஆனால் சில மோசமான துடுப்பாட்டத் தேர்வுகளும், ஒரு ரன் அவுட்டும் எங்களிடம் இருந்து போட்டியை மாற்றி விட்டது.

நான், ரொபின் உத்தப்பா ஆகியோர் நன்றாக ஆடி ஆட்டத்தை முடித்து இருக்க வேண்டும். ஆனால் எனது தவறின் மூலம் வெற்றியை நோக்கிச் செல்ல முடியவில்லை. கிறிஸ் லின் சிறப்பாக ஆடினார்.

இந்தத் தொடரில் இளம் வீரர்கள் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி கொண்டனர். இது அணிக்குச் சிறப்பாக அமையும்" என்று கூறியுள்ளார். (அ)

## ரஷீத்தை விட்டுக்கொடோம்



காபூல், மே 27

"நாங்கள் ரஷீத்கானை விட்டுக் கொடுக்க வில்லை" என்று ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கானி தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் இறுதிப் போட்டியில் நுழையும் இரண்டாவது அணிக்கான போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின. இதில் சன் ரைசர்ஸ் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

சன் ரைசர்ஸ் அணியின் இந்த வெற்றிக்கு அந்த அணி வீரர் ரஷீத்கான் (ஆப்கானிஸ் தானைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்) முக்கிய காரணமாக விளங்கினார். 10 பந்துகளில் ரஷீத் கான் எடுத்த 34 ஓட்டங்ள்தான் சன் ரைசர்ஸ் அணி கௌரவமான இலக்கை எட்ட வழி செய்தது.

துடுப்பாட்டத்தில் மட்டுமல்லாமல் 3 விக்கெட்டுகள், இரண்டு பிடியெடுப்புகள், ஒரு ரன்-அவுட் என அந்தப் போட்டியின் நாயக னாக ரஷீத் வலம் வந்தார்.

ரஷீத்கானின் இந்த ஆட்டத்தைப் பாராட்டி சச்சின் டெண்டுல்கர் உட்பட பல கிரிக்கெட் பிரபலங்கள் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இதுகுறித்து ஆப்கானிஸ் தான் அதிபர் அஷ்ரப் கானி தனது ருவிட்டர் பக்கத்தில், "நமது கதாநாயகன் ரஷீத்கானை நினைத்து ஆப்கான் முழு பெருமை கொள்கிறது. எங்கள் நாட்டு வீரர்கள் அவர்கள் திறமையைக் காட்ட தளம் அளித்துக் கொடுத்த இந்திய நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். ரஷீத் ஆப்கானிஸ்தானின் சிறந்தவற்றை நினைவுபடுத்துகிறார். அவர் கிரிக்கெட் உல குக்கு சிறந்த சொத்தாக இருப்பார். நாங்கள் அவரை விட்டுக் கொடுக்கவில்லை" என்று பதிவிட்டு இருக்கிறார். (அ)

## டிவில்லியர்ஸ் என் சகோதரர்

புதுடெல்லி, மெ 27

' சர்வதேசக் கிரிக்கெட்டின் துடுப்பாட்ட முறைமையையே மாற்றியவர் என் சகோதரர் டிவில் லியர்ஸே' என்று இந்திய அணி யின் தலைவர் விராட் கோலி புகழாரம் சூட்டியுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வீரர் ஏபி டிவில் லியர்ஸ் சர்வதேச கிரக்கெட் போட் டிகளில் இருந்து ஓய்வு பெறு வதாக கடந்த சில நாட்களுக்கு முன் அறிவித்தார். அவருடைய ஓய்வு அறிவிப்புக்குப் பின் முன் னணி வீரர்கள், முன்னாள் வீரர் கள் எனப் பலரும் வாழ்த்துகள் தெரிவித்து இருந்தனர்.

ஆனால், ஐ.பி.எல் போட்டி யில் ரோயல் பெங்களூர் சலஞ்ர்ஸ் அணியில் இணைந்து விளை யாடிய விராட் கோலி மட்டும் எந்தவிதமான கருத்தும் தெரி விக்காதது பெரும் வியப்பை அளித்திருந்தது.

இந்நிலையில், டிவில்லியர் ஸைப் புகழ்ந்து விராட் கோலி நேற்று ருவிட்டரில் பதிவிட்டுள் ளார்.

"உங்கள் எதிர்கால வாழ்க் கையில் அனைத்துவிதமான நலன் களையும் பெற வாழ்த்துகிறேன். நீங்கள் சர்வதேச கிரிக்கெட் விளையாடிய காலத்தில் சர்வ தேசக் கிரிக்கெட்டின் துடுப்பாட்ட முறைமையையே மாற்றி இருக் கிறீர்கள் என்பதைக் காண முடிந் தது சகோதரரே. உங்களுக்கும் உங்களின் குடும்பத்தாருக்கும் எதிர் காலத்தில் அற்புதமான வாழ்க்கை இருக்கிறது" என அந்தப் பதி வில் கோலி தெரிவித்துள்ளார். (அ)



## பாபர் அசாம் விலகல்

லண்டன், மே.27

லண்டன் லோர்ட்ஸ் மைதா னத்தில் நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டின் போது ஏற்பட்ட காயம் காரணமாக பாகிஸ்தான் வீரர் பாபர் அசாம் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடை பெற்று வருகின்றது.

இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 184 ஓட்டங்களுக் குள் சுருள, பாகிஸ்தான் மிரட்ட லாக துடுப்பெடுத்தாடி 363 ஓட் டங்களைக் குவித்தது. பாகிஸ் தான் அணி சார்பில் அற்புதமாக ஆடிய பாபர் அசாம் 68 ஓட் டங்களை எடுத்திருந்தபோது, அவரது கையில் பந்து பட்டது. இதனால் அவரின் மணிக்கட்டு எலும்பு முறிந்தது. உடனடி யாகக் களத்தை விட்டு அகன்ற அவர், சிகிச்சையின் பின் சில மாதங்கள் ஓய்வெடுக்க வேண்டி யுள்ளது.

இதையடுத்து, அசாம் இங் கிலாந்து தொடரில் இருந்து வில குவதாக அறிவித்துள்ளார். (அ)

## அதெல்லாம் பொய்!

பிரேசில், மே 27

ஒரே நேரத்தில் இரு பெண் களைத் திருமணம் செய்து கொள் ளவுள்ளதாக வெளியான தகவலை பிரேசில் உதைபந்து அணியின் முன்னாள் வீரர் ரொனால்டினோ மறுத்துள்ளார்.

பிரேசில் உதைபந்து அணி யின் முன்னாள் வீரர் ரொனால் டினோ கடந்த 2013 ஆம் ஆண்டு பிரிஸிலா என்பவருடன் நெருக்க மாகப் பழகி வந்தார். இதன் பின் னர் 2016 அம் ஆண்டு பீட்ரிஸ் சவுசா என்பவருடனும் ரொனால்டி னோவுக்கு பழக்கம் ஏற்பட்டது. இந்நிலையில் இவர்கள் இருவரை யும் ரொனால்டினோ ஒரே நேரத் தில் திருமணம் செய்து கொள்ள உள்ளதாகவும், இந்தத் திருமணமா னது ரொனால்டினோவின் வீட் டில் குடும்பச் சந்திப்பு என்ற பெயரில் நடைபெற இருப்பதாக வும் பிரேசிலில் இருந்து வெளியா கும் நாளிதழ் ஒன்று செய்தி வெளி யிட்டிருந்தது.

மேலும் அந்த இரு இளம் பெண்களும் ரொனால்டினோ வுடன் கடந்த டிசம்பர் மாதம் முதலே இணைந்தே வசிப்பதாக வும் கூறப்பட்டு வந்தது. பிரேசில் நாட்டில் இரு திருமணம் என்பது சட்டப்படி குற்றமாகும். இதை மீறி செயற்பட்டால் 6 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவிக்க நேரிடும். இந்நிலையில் இந்தத் திருமணச் செய்தியை ரொனால் டினோ மறுத்துள்ளார். அவர் கூறும்போது, "இந்த உலகம் முழு வதிலும் இருந்து என்னை இது குறித்துக் கேட்கிறார்கள். ஆனால் யாரையும் நான் திருமணம் செய்து கொள்ளப்போவதில்லை. இது தொடர்பான வெளியான செய்தி மிகப்பெரிய பொய்யாகும்" என் றார். (அ)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 26.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.